DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE,
DEVAKOTTAI

Calender
Miscellaneous **CC. NO.340/2022**
Preliminary Register
Sessions

Deposition of witness for Prosecution அ.சா.1
Defence
Court

Name : யசோதரன்
Father/ Husband Name : பெரியசாமி
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :

Age :

எதிரிகள் ஆஜர்.

Solemnly affirmes to condition with the provisions of Law Act 1873 day of 23.05.2025.

**முதல்விசாரணை:-** சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

நான் தேவகோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் டிரைவராக வேலை செய்கிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 2 வருடத்திற்கு முன்பு இரவு 9.20 மணிக்கு என் வீட்டில் இருந்த போது எதிரிகள் இருவரும் என்னை அடித்து, தேவிடியா, புண்டா மகனே என்று தகாத வார்த்தையை சொல்லி 1வது எதிரி ராஜ்குமார் இரும்பு கம்பியால் தலையில் அடித்தார். இடது கை முட்டியிலும் மேற்படி இரும்பு கம்பியால் அடித்தார் பிறகு மீண்டும் தலையில் அடித்தார்கள். பிறகு என் மனைவி என்னை தேவகோட்டை அரசு மருத்துவமணைக்கு சிகிச்சைக்கு அழைத்துச் சென்றார். மேற்படி புகாரில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மேற்படி புகார் நான் கொடுத்தது தான். அரசு மருத்துவமணையில் சிகிச்சையில் இருந்த போது மேற்படி புகாரை கொடுத்தேன். **( மேற்படி புகார் அ.சா.ஆ.1-ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

1. புகாரை யார் எழுதியது என்றால் எனக்கு எழுதப்படிக்க தெரியாது என்பதால் நான் சொன்னதை காவலரும், காவல் உதவி ஆய்வாளரும் எழுதி கொண்டார்கள். எதிரிகளுக்கும் எனக்கும் வழக்கு சம்பவத்திற்கு முன்பே முன்பகை உள்ள விவரத்தை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 1வது எதிரி ராஜ்குமாரை நான் இதற்கு முன்பு கத்தியால் குத்தியதை புகாரில் சொல்லியுள்ளேனா என்றால் நான் அவரை குத்தவில்லை அவர்களாக போட்டுக் கொண்ட வழக்கு அது.

2. முதல்விசாரணையில் இரும்பு ராடால் அடித்ததாக சொல்லியுள்ள விவரத்தை மருத்துவமணையில் மருத்துவரிடம் சொன்னேனா என்றால் இல்லை. சம்பவம் நடப்பதற்கு 6 மாதத்திற்கு முன்பே என் மனைவி என்னை விட்டு பிரிந்து அவருடைய அப்பா வீட்டிற்கு சென்று விட்டார் என்றால் இல்லை அவர் தான் என்னை மருத்துவமணைக்கு ஆட்டோவில் அழைத்து சென்றார்.

3. நான் புகாரில் சொன்னதை தான் முதல் விசாரணையிலும் சொல்லியுள்ளேனா என்றால் ஆமாம். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் நான் தான் மதுபோதையில் தன்னிச்சையாக பேசிக்கொண்டு இருந்தேன் என்றால் இல்லை. எதிரிகள் என்னை அடிக்கவில்லை என்றும் நான் தான் மதுபோதையில் வீட்டு வாசலில் உள்ள கல்லுகாலில் விழுந்து காயத்தை ஏற்படுத்திக் கொண்டேன் என்றால் சரியல்ல.

4. எதிரிகள் என்னை ஆபாசமாக பேசவோ, அடிக்கவோ மற்றும் கொலை மிரட்டல் விடுக்கவோ இல்லை என்றும் நான் பொய்யாக புகார் கொடுத்துள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் சம்பவம் நடந்த அன்றே புகார் கொடுத்தேனா என்றால் மறுநாள் காலையில் தான் மருத்துவமணையில் வந்து போலீசார் என்னிடம் புகாரை எழுதி வாங்கி கொண்டார்கள். எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :</u>** இல்லை.

S/d.D. பூர்ணிமா.,B.A.B.L. (Hons.) LL.M.,
நீதித்துறை நடுவர்,
தேவகோட்டை.